முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1053

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.08.2022, புதன்கிழமை

1. தர்மபலம் கொண்ட ஞானியே
தவசியாக வாழும் யோகியே
பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
பிரணவக்குடில் படைத்த அரங்கமகா தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 01 நாள், 17.08.2022 புதன்கிழமை)
ஆசி தந்து ஆறுமுகன் யான் உன்
ஆற்றலாய் கலந்து நிற்க
3. நிற்கவே அரங்கன் உன் வழி
நிலவுலகை காக்கும் உயர்வழியாகும்
பற்றுகொண்டு உன் திருவடி பற்றி
பாருலகோர் ஞானம் பயின்றுவர
4. வருகவே மக்களெல்லாம் ஞானிகளாகி
வையகத்தை காக்கும் சக்திகளாக மாறுவர்
ஆகவே அரங்கன் திருவடி பற்றி
அகிலம் சன்மார்க்கம் என்கின்ற உயர் ஞானத்தை
5. வகைபட அன்னதான சேவையோடு
வரவேற்று உலகோர் செய்து வர
தரணி எங்கும் ஞானவான்கள் ஆட்சி
தட்டாது ஞானிகள் ஆட்சியாக உருவாகும்
6. ஆகவே அரங்கன் வாழ் பிரணவக்குடிலை அகிலத்தார் அடைந்து உயர்ஞானமாக
வரம் தரும் அரங்கன்பால் தீட்சை வையகத்தார் முன்மொழிந்து ஏற்று பின்தொடர
தொடரவே ஞான யுகமாற்றம்
தெரிவிப்பேன் சடுதி நிகழக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–